# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் சசு | திருவள்ளுவர் யாண்டு உயயசு இராட்சச, ஆடி (1975 — ஜூலை — ஆகஸ்டு) | மலர் ச |
|---|---|---|

## "மண்ணில் வளையாத செங்கோல் வளைந்தது"

சி இராமகிருட்டினன், (துணை நீதிபதி)

நீதிநெறியைக் கட்டிக்காப்பதில், என்றுமே தமிழகம் முதல் இடம் வகித்து வருகின்றது. திருக்குறள் கூறும் அறநெறி வழி ஆட்சி செலுத்தும் இன்றைய கலைஞர் அரசிலும் நீதித்துறை போற்றப்படுகின்றது. நீதிவளையாது நிமிர்ந்து நிற்கின்றது. இது போன்றே தமிழகத்தின் நீண்ட வரலாற்றில் நீதி வளைய வில்லை. வளைந்தது போன்று தோற்றம் கண்டபோது கலைஞர் போன்ற அறம்புரி நெஞ்சினர், நிமிர்த்தியுள்ளனர்.

"ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார் மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை" — குறள்.

நீதியின் முன் மனிதர் எல்லோரும் சமமாகவே கருதப்படுவர் என்பது மேல்கூறிய குறள் காட்டும் கோட்பாடு. தமிழகம், ஒருபடி மேலே சென்று, மனிதர்க்கென வழங்கும் நீதி, முறை வேண்டி வரும் விலங்குக்கும் உண்டு என்று காட்டி புதிய மரபு படைத்திருக்கின்றது. அரண்மனையில் கட்டிய ஆராய்ச்சி மணியை அசைத்தால் நீதி கிடைக்கும் என்ற நிலை தமிழர்கள் நீதியின்மேல் வைத்திருந்த ஆர்வத்துக்கோர் எடுத்துக்காட்டு.

"யாம் நின்பால் இரப்பவை
பொன்னும், பொருளும், போகமுமல்ல,
அன்பும் அறமும், அருளும்தான்"

என்ற பரிபாடல்

மக்கள் ஆளுவோரிடமிருந்து பெரிதும் வேண்டியது அற உணர்வுதான் என்பதைத் தெரிவிக்கின்றது நாட்டை ஆண்டவர்களும், எப்பாடு பட்டும் நீதியைக் காப்பதே தங்கள் தலையாய கடமையெனச் செயல்பட்டனர் நீதிக்காகத்தன் ஒரே அன்பு மகனை ஆழியில் மடித்த மனு நீதிச்சோழன், தன் கையையே துணித்த பொற்கைப் பாண்டியன், தன் இன்னுயிரையே போக்கிய பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகியோரின தியாகம், தமிழகப்பழைய நீதிமுறை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள சாதனைகளாகும்.

தமிழகத்தில் நிலவிய நீதிமுறை, மனுச்சட்டம் போன்று ஒரு குலத்துக்கொரு நீதியாக இருக்கவில்லை தமிழர் சட்டம். ரோம-கிரேக்க சட்டத்தைப்போல், குடிமக்களுக்கென ஒருவிதி, அடிமைகளுக்கென ஒருவிதி எனப்பிரித்துக் காட்டாத மேம்பட்ட சட்டமாக விளங்கியது.

இப்படி உயர்ந்த நீதிமுறை நிலவியும், நீதிக்கும் ஊறு நேர்ந்த சம்பவங்களும் உண்டு. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் எழுந்த காலத்திலே விளைந்த ஒரு சம்பவத்தை இங்குத் திறனாய்வு செய்வோம்.

சிலம்புச்செல்வர் கூறுவதுபோல், தமிழ்ப் பெருமக்களை ஒன்றுபடுத்தவே, சிலப்பதிகாரத்தை எழுதினார் இளங்கோ அடிகள். தமிழர்கள் " ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு " என்ற உண்மையையும் சிலப்பதிகாரம் வலியுறுத்துகின்றது. அதே மூச்சில், நீதியைக்கட்டிக் காப்பதிலும் தமிழர்கள் இணையற்றவர்கள் என்ற செய்தியையும் உலகுக்கு அறிவிக்கும் வரலாற்றுப் பெட்டகமாகவும் திகழ்கின்றது

பூம்புகாரிலே வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான் மகன் கோவலன். கோவலன் மண்தேய்ந்த புகழினன். மதிமுக எழில் நங்கையர்களால் பாராட்டப்பட்டவன். மங்கையரால் வணங்குவதற்குத் தகுதிபடைத்த கண்ணகி என்னும் பொற்பாவையை மணந்தான் கோவலன். கயமலர்க்கண்ணி கண்ணகியும் காதற் கொழுநன் கோவலனும், இன்பவெள்ளத்தில் மிதந்தனர். இனிய வாழ்வு நடாத்தினர். அவர்கள் இன்ப வாழ்விலே மாந்தளிர் மேனி மாதவி மடந்தை குறுக்கிட்டாள்.

கோவலன், ஆடலும், பாடலும், அழகும் ஆகிய மூன்றையும் நிறைவுறப்பெற்ற மாதவியின் பால் மையல் கொண்டு, குன்று

போன்ற தன் செல்வத்தையெல்லாம் இழந்தான். பின்னர் மாதவி பால் ஏற்பட்ட மையலையொழித்துத் தன் மனைவியிடம் சென்றான் போற்றா ஒழுக்கம் புரிந்து ஏசலுக்குள்ளான கோவலன், மாறாத ஒழுக்கத்துடன் வாழ்ந்த தன் மனைவியைப் பார்க்கவும் நாணினான். அவளோ நகைமுகம் காட்டித் தான் பட்ட துன்பத்தையெல்லாம் மறைத்துத்தன் கைப்பிடித்த கொழுநனை வரவேற்றாள்.

கோவலனும், கண்ணகியும், மல்லல்மூதூர் மதுரை சென்று புதியவாழ்வு தொடங்கலாம் என்று மதுரையடைந்தனர். மதுரையில் புறஞ்சேரியில் மாதரி என்ற மங்கைநல்லாள் மனையில் கண்ணகி இருக்க, கோவலன் கண்ணகியின் காற்சிலம்பொன்றை விற்றுவர நகரின் வீதிகளிலே நுழைந்தான். பாண்டியன் நெடுஞ்செழியன் துணைவி கோப்பெருந்தேவியின் காற்சிலம்பு ஒன்றைக் களவாடி மறைத்து வைத்திருந்த பொற்கொல்லன் ஒருவன் எதிர்ப்பட்டான்.

கோவலன் கையில் அரிய வேலைப்பாடமைந்த சிலம்பைப் பார்த்த பொற்கொல்லன், கோவலனைத்தன் வீட்டில் இருக்க வைத்துவிட்டு மன்னனிடம் சென்றான். விறன் மிகுவேந்தன், கோப்பெருந் தேவியின் ஊடலைத் தணிக்க விரைந்து செல்லும் சமயத்தில், தேவியின் காற்சிலம்பு திருடிய கள்வன் தன் அகத்தே சிலம்புடன் உள்ளான் என்று பொற்கொல்லன் கூறினான். மன்னன் ஊர்க்காப்பாளரை அழைத்துக் கள்வனைக் கொன்று சிலம்பைக்கொணரும்படி உத்திரவிட்டான். காவலரும் மன்னன் உத்திரவையேற்று, கோவலனைக் கொன்று சிலம்பைக் கொணர்ந்தனர்

கோவலன - கண்ணகி வாழ்வு பரிதாபத்துக்குரிய தாகவே இருக்கின்றது புகாரில் தொடங்கிய இன்பவாழ்வில் ஆடலரசி மாதவி குறுக்கிட்டாள். கண்ணகியிடமிருந்து கோவலன் பிரிவதற்கும், கோவலனிடமிருந்து செல்வம் தொலைவதற்கும் மாதவி காரணமாய் அமைந்தாள். மதுரையில் புதிய வாழ்வு தொடங்கலாம் என நினைத்தபொழுது பொன் வினைக் கொல்லன் எதிர்ப்பட்டான். கண்ணகியிடமிருந்து கோவலன் நிரந்தரமாகப் பிரிவதற்குக் காரணமாக அமைந்தான் கருந்தொழில் கொல்லன். புகாரில் கோவலனைக் கலை மயக்கியது மதுரையில் துரோகம் சதி செய்து கோவலனைச் சாய்த்தது. கோவலன் எளிதில் மயங்குபவனாகவும், ஆராயாது, பார்த்தளவில் நம்

பிக்கை கொள்ளும் அனுபவமற்றவனுகவும் காணப்படுகின்ருன். ஆகவே மயக்கமும், துரோகமும், எளிதில் அவனை வென்று விட்டதில் வியப்புக்கு இடமில்லை.

பொன்செய் கொல்லன் கோப்பெரும் தேவியின் காற்சிலம்பு ஒன்றைத் திருடி மறைத்து வைத்திருந்தான். தன் களவு எங்கு வெளிப்பட்டுவிடுமோ என்று அஞ்சிய நிலையில் நடமாடிய கொல்லன், வெள்ளை உள்ளமும், பகட்டில் மனதைப் பறிகொடுக்கும் போக்கும் கொண்ட கோவலனைச் சந்தித்தான். பொற்கொல்லனது உள்ளத்தில் நேர்மையில்லாததால் கைவினை முற்றிய நுண் வினைக்கொல்லர் நூற்றுவர் பின்தொடர, விலங்கு நடையுடன் வீதியிலே வந்தான்,

கோவலன், புகாரில் செல்வம் கொழிக்க வாழ்ந்த பெருங்குடி வாணிகன் மாசாத்துவான் மகன். மதுரையில் செல்வாக்குடன் வாழும் எந்த வாணிகரும், மாசாத்துவான் மகன் என்றதுமே, கோவலனுக்கு எந்த உதவியும் செய்யத்தயங்கார். மதுரை வரையிலும் கண்ணகியின் பாதுகாப்புக்கு வந்த கவுந்தி அடிகள், மதுரையம்பதியில் வாழும் வணிகரின் உதவியை நாடி புதிய வாழ்வு தொடங்கும்படி கோவலனுக்கு அறிவுரை தந்திருந்தார். அனுபவமிக்க அந்த அறிவுரையைப் புறக்கணித்து, நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்தொடர பகட்டுடன் வந்த பொற்கொல்லன் பின் அவன் மனம் சென்றது. "தென்னவன் பெயரொடு சிறப்புப்பெற்ற பொன் வினைக் கொல்லன் இவன்" எனக் கோவலன் கற்பனையை மனதில் தேக்கிக் கொண்டான்.

கோவலனது கையில் உள்ள அரிய சித்திரச் சிலம்பைப் பார்த்ததுமே கொல்லனது சூழ்ச்சி தொடங்கியது "மன்னனது தேவி அணிவதற்குத் தகுதியான சிலம்பு இது. உன்னுல் விற்றுத்தர இயலுமோ" எனக் கொல்லனிடம் கோவலன் வினவினுன். கோவலன் தான் இன்னுன் எனக் கொல்லனிடம் சொல்லாதது புரியாத புதிராக இருக்கின்றது. தன்னையொத்த வணிகர்களிடம் தன் நிலை பற்றிக்கூற நாணினுலும், கொல்லனிடம் கூறியிருக்கலாம்.

பொன்செய் கொல்லன் கள்ளமனம் படைத்திருந்தான். "கருந்தொழிற் கொல்லன்" என்று சிலப்பு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமே. "இவன் புலம் பெயர் புதியவன். இவனிடம் இத்துணை விலையுயர்ந்த அரிய சித்திரச்சிலம்பு எங்ஙனம் வந்திருக்கக்கூடும்" என்று சிந்தனையைப் பறக்கவிட்ட கொல்லன்,

தான் செய்த களவு வெளிப்படுமுன், கோவலனைக் கள்வனுக்கித் தப்பித்துக்கொள்ளலாம் என்று திட்டம் வகுத்தான். ஆகவே கோவலனைப் பார்த்து, "விற்றுத்தரும் தகுதியுடையேன் அல்லன். ஆனலும் வேந்தன்முடி முதலிய அணிகலன்களைச் செய்பவன் நான். இவ்வரிய சிலம்பை அணிய அரசியே பொருத்தமுடையவள். விறன் மிகு வேந்தனிடம் விளம்பி வருவேன்" எனப்பணிந்து கூறினன்.

கோவலன், ஒரு பெரிய வணிகன் மகன். மன்னனிடம் தானே நேரில் சென்று, கண்ணகியின் காற்சிலம்பின் அருமை பெருமையினை விளக்கி, விற்க முயன்றிருக்க வேண்டும். 'அடியேன் அறியேன்' என்று பொற் கொல்லன் கூறிய பிறகும், மன்னனை நேரில் பார்க்கக் கோவலன் நினைக்காதது வியப்புக் குரியது. பெருங்குடி வாணிகர், பழைய தமிழகத்தில், மன்னர் குடியினருக்கு அடுத்த குடியினராகவும், மன்னர்களால் மதிக்கப் பெற்றவர்களாகவும் இருந்தனர். இது கோவலனுக்குத் தெரியாததல்ல. இருந்தும், "வேந்தனிடம் விளம்பி வருவேன். அது வரையிலும் என் சிறு குடிசையில் இரு" என்று பொய்த் தொழில் கொல்லன் கூற வாய் திறக்காது அவனது குடிசையில் இருக்கச் சம்மதித்த கோவலனது போக்குப் புரியவில்லை.

கொல்லனது குடிசையில் வசமாக அரிய சிலம்புடன் மாட்டிக் கொண்டான் கோவலன். கொல்லனது சூழ்ச்சி பாதிக்குமேல் வெற்றி பெற்றதென்றே கூறலாம். கோவலனை இனி எதுவும் செய்து சிலம்பைக் கவரமுடியும். மன்னனே கொல்லனது சூழ்ச்சிக்கு இறையாகாமல் போனலும், கோவலன், கொல்லனது சூழ்ச்சியிலிருந்து இனித்தப்ப இயலாது என்பதைக் கண்டு கொண்டான் கொல்லன். "கலங்கா உள்ளம் கரந்தனன் செல்வோன்" என்ற வரி இதைத் தெளிவாகக் கூறுகின்றது. கொல்லன் விரித்த வலையில் கோவலன் தன்னையறியாது தானே சிக்கிக் கொண்டான் என்பதை, "தீவினை முதிர்வலைச் சென்று பட்டிருந்த கோவலன்" என்று சிலப்பதிகார அடி குறிப்பிடுவதைக் காணலாம்.

பொய்வினைக் கொல்லன் சூழ்ச்சியின் முக்கிய பகுதியை முடிக்கக்கலங்கா உள்ளத்துடன், பாண்டிய மன்னனைக் காணச் சென்றுன். மன்னன், மதுரையம்பதியின் நாடக நங்கைகளின் ஆடல் அசைவில் அவர்களது அழகிய தோற்றத்தையும், அவர்களது இனிய பாடலையும், பண்ணின் இனிமையையும் சுவைத்த படி இருந்தான். மன்னனது ஈடு பாட்டைக் கவனித்த அரசி

ஊடல் கொண்டு அரண்மனையின் அந்தப்புரத்துக்குச் சென்று விட்டாள். தன் முன்னே நிகழ்ந்து கொண்டிருந்த ஆடல், பாடலில் மன்னன் மனம் இனிச் செல்லுமா?

மன்னன் எழுந்தான். அவையில் இருந்த அமைச்சர், மந்திரக் கணக்கர் ஆகியோரிடம் விடைபெற்று, அரசியின் ஊடலைத் தணிக்கும் பெரும் விருப்பத்துடன் கோப்பெருந்தேவியின் கோயில் நோக்கி விரைந்தான். கொல்லன் தன் காரியம் நிறைவேற இந்தச் சமயத்தையே பயன்படுத்தினன். "ஊடுதல் காமத்துக்கின்பம்" என்பர். தேவியின் ஊடல் மன்னனின் காமத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் கூடியது. மன்னனும் காம விருப்புடன் தேவியின் ஊடலைத் தணிப்பது தன் கடன் என நினைத்தான் போலும்.

பாண்டிய மன்னன், அரசவையிலே, செங்கோல் மன்னன் என்ற முறையிலே தன் கடமைகளையும், பணிகளையும் முடித்து விட்டான். ஊடல் என்பது கணவன்-மனைவிக்குள் காமத்தைப் பெருக்க மேற்கொள்ளும் உத்தி. நெடுஞ்செழியன் அரசுப் பணிகளை முடித்துவிட்டு மனைவியின் ஊடலைத் தணிக்க அவளது கணவன் என்ற முறையிலேதான் சென்று கொண்டிருந்தான். நீதி சம்பந்தமான புகாரை மன்னனிடம் தெரிவிக்க இது நேரமல்ல, ஆனல் கருந்தொழில் கொல்லன், சிலம்பு பற்றிய புகாரைத் தெரிவிக்க இந்த நேரத்தையே பயன்படுத்தினன். தனது சூழ்ச்சி வெற்றிபெற நேர்வழி உதவாது; குறுக்குவழியே சாலும் என்பதை அறிவான்.

அரசியிடம் உள்ளத்தை அனுப்பிவிட்டுச் சில பணிப் பெண்களுடன் நடந்து கொண்டிருந்த காவலன் காலடி முன் வீழ்ந்தான் பொற்கொல்லன். தாழ்ந்து மன்னனைப் பலபடி போற்றினன். "வீழ்ந்தனன் கிடந்து, தாழ்ந்து பலஏத்தி" என்ற அடி கொல்லன், மன்னன் முன் நிகழ்த்திய பொய் நாடகத்தையே நம்முன் படம் பிடித்துக் காட்டுகின்றது. சிறிய அளவிலே கோவலன் முன்னும் ஒரு நாடகத்தை நடத்தியவன் கொல்லன். "கூற்றத் தூதன் கைதொழுது ஏத்த" என்று சிலப்பதிகாரம் கூறுவதை நினைவில் கொள்ளலாம்.

"கன்னகம் இன்றியும், கவைக்கோல் இன்றியும்,
துன்னிய மந்திரம் துணை எனக் கொண்டு
வாயிலாளரை மயக் குதுயில் உறுத்து
கோயில் சிலம்பு கொண்ட கள்வன்

கல்லென் பேர்ஊர்க் காவலர் கரந்து, என்
சில்லைச் சிறுகுடில் அகத் திருந்தோன் "

என்று கொல்லன் அருமையாக சோடனை செய்து கூறினன். களவு போன அரசியின்காற்சிலம்பு ஒரு புதியவனிடம் கண்டேன். அவன் என் வீட்டில் உள்ளான். என்றுதான் மன்னனிடம் கொல்லன் கூற வேண்டும். ஆனால் கொல்லனே கள்வன் காவலரை ஏமாற்றிக் களவாடிய முறை, ஊர்க்காவலரிடமிருந்து மறைந்து திரியும் திறன், ஆகியவற்றை மன்னனிடம் சொன்னன். உளவியல் அறிந்தவர்க்கு ஒன்று தெரியும். கொல்லன் தன்னையே வைத்துப் பேசுகின்ருன் என்பதை தான் செய்ததைக் கோவலன் மீது ஏற்றிப் பொய்யை மெய்போலக் கேட்டவர் நம்பும்படி பேசியுள்ளான்

காலடியில் வீழ்ந்து வணங்கினன். பலபடி போற்றித் தாழ்ந்து போற்றினன். கள்வன். அரசியின் காற் சிலம்பைத் திருடிய விதத்தைப் படம் பிடித்துக் காட்டித் தானே அதைக் கண்டது போல விவரித்தான் கொல்லன். மன்னன் கொல்லனை அப்படியே நம்பிவிட்டான். ஆகவே ஊர்க்காப்பாளரைக் கூவி அழைத்தான்.

" ஈங்குஎன்
தாழ் பூங்கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகின்
கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கு "

என்று ஆணையிட்டான்.

பெருமன்னன் பாண்டியன் செய்தது சரிதானு? இறைமுறை பிழைத்து விட்டதா? என்ற வினுக்கள் எழத்தான் செய்கின்றன இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்கு முன். இந் நிகழ்ச்சி நடந்த காலத்தையும், நேரத்தையும் சூழ் நிலையையும் குற்றத்தின் தன்மையையும், நாம் ஒரு கணம் எண்ணிப் பார்க்கவேண்டும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், மன்னர்கள் சகல அதிகாரங்கள் படைத்தவர்களாகவும். இருந்தனர் அவர்கள் இட்டது சட்டம் என்ற நிலையும் இருந்தது. " மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம் " என்று சங்கப் பாடல் கூறுகின்றது மன்னன் பாண்டியன் மனம் அவனிடத்தில் இல்லை. தேவியின் ஊடலைத் தணிக்கும் எண்ணம் தான் அவனது சிந்தனையில் நிரம்பியிருந்தது செய்யப்பட்ட குற்றமோ

சாதாரணக் குற்றமல்ல. களவாடுதல், பழைய காலத்தில் பெருங்குற்றங்களில் ஒன்று எனக் கருதப்பட்டது. அதுவும், மன்னனது தேவியின் காற் சிலம்பைக் களவாடுதல் பெருங் குற்றங்களில் தலையான குற்றமே ஆகவே மன்னன் கள்வனைக் கொல்ல ஆணையிடும் அதிகாரம் வரம்புமீறிய தென்றோ, அல்லது அளிக்கப்பட்ட தண்டனை மிகையான தென்றோ கூற முடியாது.

"கொலையிற்கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களை கட் டதனொடு நேர்"

என்று குறள் கூறுகின்றது. கொடியவர் என்ற பட்டியலிலே கள்வரும் இடம் பெறுகின்றனர் என்பது பரிமேலழகர் உரை.

"கள்வனைக்கோறல் கடுங்கோல் அன்று
வெள்வேற் கொற்றம் காண்"

எனச் சிலப்பதிகாரம் பேசுகின்றது ஆகவே கள்வனுக்குரிய தண்டனை பழங்காலத்தில் 'மரணம்' என்பது அன்றைய நீதி நூற்களும் ஏற்றிருக்கின்றன,

சுமார் 800 ஆண்டுகளுக்கு முன். இங்கிலாந்து, செர்மெனி போன்ற மேலை நாடுகளில் திருடிய குற்றத்துக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டு வந்தது. 1256-ம் ஆண்டில் நார்த்தம்பர்லண்டில், ஒரு புதியவன் துறவியிடம் திருடுவதைப் பார்த்தான் சார்செண்ட், திருடனைப் பிடித்த சார்செண்ட், திருடனின் தலையைச் சீவிக் கொன்றான். திருடன் திருடிய சாமானுடன் பிடிபட்டால், திருடனின் தலையை வெட்டுதல், எங்கள் கவுண்டியின் பழக்கமென, சார்செண்ட் நீதிபதிகளிடம் பின்னர் கூறினான். (Three Northumber land Assize Rolls 70. Proseenting crime in the Renaissance by John H. Langben Book Revied in the Yale Law Journal)

1295-ல் சின்கிபோர்ட் (Cinzue Ports) என்ற இடத்தில் நிலவிய வழக்கப்படி, எவன் ஒருவன், எட்டுக்காசு (Pens) களுக்கு மேல் திருடிய திருடனைக் கையுடன் பிடிக்கின்றானோ, அவன் அத் திருடனைத் தூக்குப் போட்டுக் கொல்லலாம் (BoRough Custom—Prosecuting Crine in the Renaissance by John H Lang bein. Yale Law Journal)

நீதித் துறையில் தற்காலத்து விதி, குற்றத்தை அரசு தகுந்த சான்றுகளுடன் மெய்ப்பிக்க வேண்டும் என்பது. குற்றம் மெய்ப்பிக்கப்படும் வரையிலும் குற்றம் சாட்டப்பட்டவன், நிரபராதி யென்றே கருதப்படுவான். ஆனால் பழங் காலத்தில் நிலைமை வேறு. குற்றம் சாட்டப்பட்டவன் குற்றவாளியெனக் கருதப்படுவான். தான் நிரபராதியென அவன் மெய்ப்பிக்க வேண்டும். அன்று செர்மன் நாட்டு நீதி மன்றங்கள், குற்றம் சாட்டப்பட்டவனைப் பற்றிய செய்திகள் அவன் கெட்டவன் என்று கூறினால், அதை வைத்தே அவன் குற்றவாளி என்று தீர்ப்புக் கூறி தண்டனை தந்தன என்று மேலே கூறிய புத்தகத்தில் ஆசிரியர் கூறுகின்றார் யாராவது குடிமகன். "இவன் கெட்டவன். சாட்டப்பட்ட குற்றத்தைச் செய்திருப்பான்" எனச் சத்தியம் செய்தால் போதும். குற்றவாளிக்குத் தண்டனை நிச்சயம். (It was assumed that the accused was quilty. The German Courts went further than the English and devised a "proceeding upon repute" (Verfahren and Leumund) That allowed officials to convict by swearing to the cvil rupute of the accused P. 146 of the above Book)

மத்திய காலத்திலே மேலை நாடுகளில், குற்றவாளியை உயிருடன் புதைப்பது, தீயில் போட்டு சாகடிப்பது போன்ற பல கொடுமைகள் நீதியின் பெயரால் நடந்தன என்றும், இன்னும், குற்றம் சாட்டப்பட்டவனைக் குற்றத்தை ஒத்துக்க வைக்கப் பல கொடுமையான முறைகள் அங்கு கையாளப்பட்டன என்றும், ஆசிரியர் சான் தனது புத்தகத்தில் (Prosecuting the Crime in Renaissance) மிகவும் வேதனையுடன் குறிப்பிடுகின்றார். இவைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கையில், தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலவிய நீதி முறையிலும் காட்டப்பட்ட நாகரீகம் விதந்து போற்றற் குரியதே

மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் பாண்டியன் மூன்று தவறுதல்களைச் செய்துள்ளான் என்று படுகிறது. அவை (1) குற்றவாளியைத் தானே நேரில் பார்க்காதது (2) கள்வன் கையில் உள்ளது அரசியின் சிலம்பா என்று ஆராயாதது. (3) அரசியின் சிலப்பை கோவலன் திருடியது மெய்யா என்று பார்க்காதது நாம் ஆழ்ந்து ஆராய்ந்தால், இம் மூன்று தவறுகளும் அடிபடுவதைக் காணலாம்.

பாண்டியன் நெடுஞ்செழியன், தமிழகத்தை அன்று ஆண்ட மூன்று சிறந்த பேராசர்களில் ஒருவன். அவனது கோலின்

செம்மையும், குடையின் தன்மையும், வேலின் கொற்றமும், சிறந்து விளங்கின. அவன் தென்னகப் பொருப்பின் தலைவன்; பழியொடுபடராப்பஞ்சவன் வேண்டுமென்றே எத்தகைய தவறையும் செய்யாத பெருந்தகையாளன். ஊர்க்காவலரை அழைத்து, மன்னன் ஆணையிட்ட வேளை

"வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினை அலர் வேம்பன் தேரான் ஆகி"

என்று இளங்கோ அடிகள் கூறி, மன்னன் மேல் தவறில்லை என்று காட்ட விரும்புகின்றார்.

நாம் இளங்கோ அடிகள் போன்று, வினைவிளை காலத்தைத் துணைக் கழைக்கத் தேவையில்லை மன்னன், ஆணையிட்ட வேளை அவன் ஒரு நீதிபதியாகக் கடமையாற்றவில்லை, அரசவை கூடும் பொழுது அவன் நீதிபதி. ஆணையிட்ட காலை, அவன் அதிகாரம் பெற்ற மன்னனுகவும், கோப்பெருந்தேவியின் ஊடலைத் தணிக்கும் கணவனுகவும் இருந்தான் அவன் அவ்வேளை இருந்த நிலை, பொய்வினைக் கொல்லன் நடத்திய நாடகம், யாரையும் மயங்க வைக்கும் பெற்றியதாகவே இருந்தது. அந்த நிலையிலும், மன்னன், "இதோ, பொற்கொல்லன் காட்டும் கள்வனைக் கொன்று, சிலம்பைக் கொணர்க" என்று ஆணையிடவில்லை.

மன்னன் மிகவும் எச்சரிக்கையாகத் தன் ஆணையில் கூறிய அறிவுரைகளை ஆய்ந்து பார்ப்பது நல்லது. அவன் கூறிய வார்த்தைகள் இதோ :—

"ஈங்குஎன்
தாழ் பூங்கோதை தன் காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகின்
கொன்று, அச்சிலம்பு கொணர்க ஈங்கு"

பாண்டி மன்னன், பொற்கொல்லன் மிகத் திறமையுடன் நடித்துச் சொல்லிய குற்றச்சாட்டை நம்பினுன் என்பது உண்மையே. "கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்" என்று கொல்லன் வர்ணித்தான். கோவலன், பாண்டிய நாட்டுக்குப் புதியவன் என்பதை மறைத்து விட்டான் பொய்வினைக் கொல்லன். கள்வன் சிலம்பைக் களவாடக் கைக்கொண்ட முறையைக் கொல்லன் விவரித்ததிலிருந்து, கள்வன் களவாடும் தொழிலில்

முதிர்ந்த அனுபவம் பெற்றிருக்கவேண்டுமென்று மன்னன் கருதினன் ஆகவேதான் " கன்றிய கள்வன் " என்று குறிப்பிடு கின்றான் மன்னன் தனது ஆணையில்.

'கன்றிய கள்வன்' என்று ஆணையில் குறிப்பிட்டாலும், அதை ஒரு விளக்கச் சொல்லாகவே (descriptive term) நாம் கொள்ளவேண்டும். கொல்லன் சொல்லிய ஆளைக் குறிக்கவே அந்தச் சொற்களை மன்னன் பயன்படுத்தினன் என்பதை ஊர்க் காப்பாளர் அறிவர். கொல்லன் சொல்வதை முழுதும் நம்பி யிருந்தால், மன்னன் " நம் அரசியின் சிலம்பைக் களவாடிய கள்வன் " என்று குறிப்பிட்டிருப்பான். தாழ் பூங்கோதையின் காற்சிலம்பு, கள்வனது கையகத்தே இருந்தால் என்று மன் னன் சொன்னதிலிருந்து, கொல்லனையும் முழுதும் நம்பாமல், ஊர்க்காப்பாளரிடம் சில பொறுப்புக்களைத் தந்தான் என்பது புலனாகும். ஒன்று அவர்கள், கொல்லன் சொல்லிய ஆளைக் காண வேண்டும். இரண்டு, களவாடியதாகச் சொன்ன காற் சிலம்பு அரசியினுடையதா என ஆய்ந்து பார்க்க வேண்டும். மூன்று அந்தக் காற்சிலம்பு கன்றிய கள்வனின் கையகத்தே இருக்கவேண்டும். மன்னன் தான் செய்ய வேண்டிய பொறுப் புக்களை ஊர்க் காப்பாளரிடம் ஒப்படைத்திருந்தான். ஆகவே மன்னன் எப்படித் தவறு செய்தான் என்று கூற முடியும்?

ஊர்க்காப்பாளர், மன்னன் ஒப்படைத்த கடமைகளைச் செய் யும் தகுதி வாய்ந்தவர்களா என்றும், தான் செய்யவேண்டிய வைகளைப் பிறரிடம் ஒப்படைக்கலாமா என்ற கேள்விகள் எழ லாம். பொதுவாக மன்னனே எல்லா வேலைகளையும் செய்வ தென்பது இயலாததொன்று. பணிகளைப் பகிர்ந்து கொள்வ தென்பது, இன்றுபோல் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்ட தொன் றாகும். அதுவும் பாண்டியன் நெடுஞ்செழியன் அவ்வேளை இருந்த நிலையில், அந்தப் பொறுப்புக்களை ஊர்க்காப்பாளரிடம் ஒப்படைத்தது சரியன்று என வாதிடுதல் தகாது அடுத்த கேள்விக்குப் பதில், ஊர்க்காப்பாளர் பொறுப்புக்களை ஏற்கும் தகுதிவாய்ந்தவர் என்பதில் ஐயமில்லை என்பது. கள்வர்களை அறிவதில் அரிய ஆற்றலுடையவர்கள் அவர்கள் " அருந் திறல்மாக்கள் " என்று சிலப்பதிகாரம் அவர்களைக் குறிக்கின்றது.

மேலும் ஊர்க்காப்பாளர் கோவலனைக் கண்டு ஆய்ந்து இவன் நல்லவனுக்குரிய இலக்கண முறைமையோடு இருக்கின் றான். களவாடிக் கொலை செய்யப்படுதற்கு உரிய இழிமகனல் லன் " எனக் கொல்லனிடம் கூறினர். இப்படி ஆராய்ந்து

கூறும் அவர்கள் தகுதியுடையவர் அன்று என எளிதில் சொல்ல முடியாது. வேண்டுமென்ருல் இன்னும் தகுதியுடையவர்களை மன்னன் அனுப்பியிருக்கலாம் என்று சொல்ல இடமுண்டு. ஆனல் அந்த வேளையில் மன்னன் கூப்பிடும் தூரத்தில் இருந்தவர்கள் அவர்கள் தான் போலும்.

கொல்லனும், காப்பாளரும், குடிசையில் சிலம்புடன் இருந்த கோவலனை நெருங்கினர்.

> ". வலம்படு தானை மன்னவன் ஏவ
> சிலம்பு காணிய வந்தோர் இவர்"

எனக் கூறிய கொல்லன், சிலம்பின் செய்தியையும் விவரித்தான் ஊர்க்காவலர் கோவலனைப் பார்த்தனர். அவன் கள்வன் மாதிரி தோன்றவில்லை. "இவன் நல்லவன். கொலைபட வேண்டிய இழிமகனல்லன்" என்று தங்கள் கணிப்பை வெளியிட்டனர் ஆனல் சிலம்பைப் பற்றி அவர்கள் கருத்தென்ன? சிலம்பைப் பார்த்த அளவில் யாரும், இது அரசியினுடையது, அல்லது இது அரசியினுடையதல்ல என்று சொல்ல இயலாது அந்தக் காலத்தில், பெரும் செல்வந்தர், மன்னர் குடும்ப அணியிழை மகளிர் அணியும் காற்சிலம்பு ஒரே மாதிரியாகத்தான் இருந்தது. சிலம்பை உடைத்தால் தான் உள்ளிருக்கும் பரல்களைக் கொண்டு வித்தியாசம் காணமுடியும் கண்ணகியின் காற்சிலம்பை மன்னவன் முன் உடைத்த பின்னர்தான் அது அரசியினுடையதல்ல என்று தெரிந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே, அங்கிருந்தவர்களில் கோவலன் ஒருவன் தான், தன் கையகத்துள் வைத்திருக்கும் சிலம்பு அரசியினுடையதல்ல என்று வாதிட முடியும். கோவலன் வாதிட்டான? இல்லை.

'இவன் நல்லவன் கொலைபட வேண்டிய இழி மகனல்லன்' என ஊர்க்காப்பாளர் கூறியதைக் கேட்டும், கோவலன் வாய் திறந்து பேசவில்லை. கோவலன் ஏன் கொலையுண்டான் என்ற கேள்வியின் திறவுகோல் கோவலனிடமே இருந்தது குற்றம் சாட்டப்பட்டவனே, வாய்திறந்து பேசவில்லை. தான் யாரென்றும் சொல்லவில்லை. தன்னிடமுள்ள காற்சிலம்பு தன் மனைவி கண்ணகியினுடையதென்றும், தான் நாடு கடந்து வந்த புதியவன் என்றும் சொல்லவில்லை கொல்லனே கள்வர்களின் சூரத்தனத்தைப் பற்றி ஒரு பெரிய சொற்பொழிவே நிகழ்த்தினன். "ஈங்கிவர்க்கு உண்டோ உலகத்து ஒப்பார்?"

எனக் கருந் தொழில் கொல்லன் முழங்கினுன். வந்திருந்த ஊர்க் காப்பாளர்களுள், இளையவனுன ஒருவனே, கொல்லன் சொல்வதில் உண்மையிருக்குமோ என எண்ணினுன். அவனும் கூட " அரிதிவர் செய்தி, அலைக்கும் வேந்தனும், " என்று கூறி என்ன செய்யலாம் என்று கேட்டான், அப்பொழுது கோவலன் வாய் திறக்கவில்லை. கோவலனுக்குக் கிடைத்த எல்லா வாய்ப்புக்களையும் இழந்து விட்டான். கல்லாக்களி மகன் ஒருவன் தன் வெள்ளிய வாளால் கோவலனை வெட்டி வீழ்த்தினுன்.

கோவலன் தானே மரணத்தை வரவழைத்துக்கொண்டான். கொல்லனது சூழ்ச்சியும், கல்லாக்களி மகனது வெறித்தனமும். அதற்குத் துணை போயின என்று சொல்லலாம்.

" காவலன் செங்கோல் வளை இய. வீழ்ந்தனன் " என இளங்கோ அடிகள் வருந்துகின்ருர், கோவலன் கையில் சிலம்பு இருந்தது. கொல்லன் அச்சிலம்பு, அரசியின் களவு போன காற்சிலம்பு எனவும், கோவலன் தான் மிகத் திறமையாகக் களவாடினுன் எனவும் வாதிட்டான் ஊர்க்காவலரும் கோவலனைப் பார்த்து ' நல்லவன் ' என்று கருதினர். ஆனுல் கோவலனே, " நான் நிரபராதி. காற்சிலம்பு, என் மனைவியினுடையது " என்று கூறத் துணியவில்லை யென்ருல், யாரை நோவது ? ஊர்க்காப்பாளரிடமே, வாய் திறக்கத் துணியாதவன். மன்னனிடம் வாய்திறந்து பேசுவான் என்று எப்படி எதிர்பார்க்க முடியும் ? ஆகவே கோவலன் கொலையுண்டதால் செங்கோல் வளைந்தது என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. அடிகள் கூற்று விவாதத்துக்கு உரியதேயொழிய, சரியென்று ஏற்றுக்கொள்ள இயலாது.

அரசவை கூடியது. திருவீழ்மார்பின் தென்னவர்கோ நெடுஞ்செழியன் அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்தான் கோப்பெருந்தேவியும் உடனிருந்தாள்.

கணவனையிழந்த கண்ணகி கடும் சினத்துடன், முறை வேண்டி மன்னன்முன் தோன்றினுள். இணை அரிச்சிலம்பு ஒன்றை ஏந்தியபடி இருந்தாள் கண்ணகி, " சிலம்பு ஒன்று ஏந்தியகையள். கணவனை இழந்தாள் கடை அகத்தாளே " என்று வாயிற்காப்போன் அறிவித்தலும், மன்னன், " வருக மற்று அவள் தருக ஈங்கு " என்று ஆணையிட்டான்.

கோவலன் எந்தச் சூழ் நிலையில் கொலையுண்டான் என்பது கண்ணகிக்குத் தெரியாது. அரண்மனையிலிருந்து அரவம் இன்றி அணி சிலம்பு களவாடியவன் எனக் குற்றம் சாட்டப் பட்டுக் கொலையுண்டான் என்பது அவளுக்குக் கிடைத்த தகவல் குற்றுயிராக இருந்த கணவன் கோவலனும் தன் இறப்புக்கான காரணத்தை மனைவியிடம் கூறவில்லை "நிறைமதி வாள்முகம் கன்றியது" என்றும், "எழுதெழில் மலர் உண்கண், இருந்தைக்க" என்றும் தனக்காக அழுத மனைவியிடம் கூறிவிட்டுப் போய்விட்டான்.

கணவனை இழந்ததால் அல்லலுற்று ஆற்ருது அழுதபடியே மன்னனிடம் வந்தாள் குற்றமற்ற கணவன், கள்வன் என்ற பழிச் சொல்லுக்கு ஆளாகிக் கொலையுண்டதால், பொங்கிய சினத்துடன் இருந்தாள் கோவலன் குற்றமற்றவன் என்பது இருவருக்குத் தெரியும் ஒருவன் கொல்லன் உண்மையை மறைத்துக் கோவலன் மேல் பழிபோட்டதே அவன் தான். ஆகவே அவன் உண்மை கூறமாட்டான் உண்மை தெரிந்த கண்ணகியும், பேசாமல் இருந்திருந்தால், கள்வன் என்ற பழிச் சொல் கோவலனுக்கும், இறைமுறை பிழைத்தோன் என்ற அவலச் சொல் செங்கோல் ஓச்சிய பாண்டியனுக்கும் நிலைத்திருக்கும்

கோவலன் குற்றமற்றவன் என்று மெய்ப்பிப்பதில் எத்துணை ஆத்திரம் கொண்டிருந்தாளோ கண்ணகி, அந்த அளவுக்கு உண்மையைத் தெரிந்து கொள்வதில் அக்கரை காட்டினுன் மன்னன். சினத்துடன் நீர்மல்க வந்த கண்ணகியை அமைதியாக. "நீர் வார் கண்ணை என்முன் வந்தோய் யாரையோ, நீ. மடக் கொடி யோய்" என்று அவள் கண்ணீரைத் துடைக்க முற்பட்டான் மன்னன் "தேராமன்ன" என்றும். "நற்றிறம் படராக் கொற்கைவேந்தே" என்றும் கண்ணகி மன்னனை ஏசியபோதும், உத்தமவேந்தன் "தேமொழி" என்றும், 'பெண்ணணங்கே' என்றும், அவளை அன்புடன் அழைக்கின்ருன் ஒரு பெரு மன்னனின் பெருந்தன்மையையும், துயர் அடைந்த ஒரு சாதாரணப் பெண்ணிடம் அவன் கொண்ட பரிவும் பளிச்சிடுகின்றன

கண்ணகி மிகத் திறமையாக வாதிட்டாள் அவள் வாதத்துக்கு வலிவான துணை அவளிடமிருந்த ஒற்றைக் காற்சிலம்பு. அது மாணிக்கக் கற்களை உள்ளிடு பால்களாகக் கொண்டி

ருந்தது. தேவியின் காற்சிலம்பு முத்துக்களை உள்ளிடு பரல்களாகக் கொண்டிருந்தது. இந்த வித்தியாசம் இல்லாதிருந்தால், உண்மை தெரிந்திருக்குமோ என்பது ஐயப்பாடு. என் காற்சிலம்பு மாணிக்கக் கற்களை உள்ளிடு பரல்களாகக் கொண்டது என்று கண்ணகி உரைத்தாள். மன்னன் தயக்கமின்றி "தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி" என்று கண்ணகியைப் பாராட்டினன் எம்முடையது முத்துக்களைக் கொண்ட காற்சிலம்பு என்று மன்னன் கூறினன். கண்ணகியின் அணிமணிச் சிலம்பு உடைக்கப்பட்டது. அதிலிருந்து வெளி வந்தவை மாணிக்கங்கள்.

"பொன்செய் கொல்லன் — தன்சொற் கேட்ட
யானே அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்"

என்று பாண்டியன் நெடுஞ்செழியன் கூறித் தன் இன்னுயிர் ஈந்தான் நீதித்துறை வரலாற்றில் பாண்டியன் ஒரு பொன்னேடு எழுதிவிட்டான், கோவலனுக்குச் சொந்தமான உயிரை, ஒரு பொன் செய் கொல்லன் சொன்ன பொய்யை நம்பி அரசு கவர்ந்தது பாண்டியன் தன் மேல் பாரத்தைப் போட்டுக் கோவலன் உயிர் கவர அரசு காரணமானதால், "யானே கள்வன்" என வருந்தி உரைத்தான்.

கருந்தொழில் கொல்லனது சூழ்ச்சியாலும், கோவலனது அறிவின்மையாலும், வளைந்த செங்கோலைத் தனது இன்னுயிர் போக்கி நிமிர்த்தினன் அறம்புரிவேந்தன். நீதிக்காக இத்தகைய நிகரற்ற தியாகம் செய்த உத்தமனை உலக வரலாற்றில் காண்பதரிது.

# திருக்குறளிலும் தொல்காப்பியத்திலும் அறம் பொருள் இன்பம் வைப்பு முறை

கவிஞர், கு எழிலரசு, பி. எசி., எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

## பொருளடக்கம்

1. 1 முன்னுரை — 2. 1 பொருளாகச் செய்யும் பொருள் — 2. 2 இம்மையும் மறுமையும் — இன்மை — 3. 1 அறத்தின் முதன்மை — 3. 2 இன்பமும் முதன்மையிடமும் — 4. 1 முடிவும் முரண்பாடும்.

## 1. 1 முன்னுரை

மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உயர்நிலை அடைதற்கான செந்நெறிகளை முறைபடக் கூறி, வாழ்வியலை நல்லாற்றுப்படுத்தும் நல்லாசானாக விளங்குவது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள். 'வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறு நல்லுலகில்'' [1] வழங்கிய மொழியின் செம்மையை எழுத்தானும் சொல்லானும் விளக்கி அம்மொழி பேசும் மக்களின் — தமிழரின் பாடறிந்து ஒழுகிய பண்பட்ட வாழ்வியலை நேர்படக் கூறித் தமிழின் உயிராக விளங்குவது தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம். இவ்விரண்டு நூல்களின் கண்ணும் காணும் 'அறம் பொருள் இன்பம்' என்னும் வாழ்வின் அடிப்படையான முப்பொருளின் வைப்பை விளக்கி, திருக்குறளின் பாலமைப்பிற்குக் காரணமாக விளங்கியது தொல்காப்பியம் என விளக்க முனைவது இக்கட்டுரையின் நோக்கம்.

## 2. 1 பொருளாகச் செய்யும் பொருள் :

'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்' [2] பொருளின் இயல்பை நன்கு ஆராய்ந்தறிந்த வள்ளுவப் பெருந்தகை,

> 'அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
> தீதின்றி வந்த பொருள்' [3]

> 'ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
> ஏனையிரண்டும் ஒருங்கு' [4]

என்னும் குறட்பாக்களின் மூலம், அறம் சீருற நடைபெறுவதற்கும், இன்பம் செம்மைப்பட நுகர்வதற்கும் பொருள் துணையாகின்றது என்பதைத் தெளிவாக்குகின்றார்.

இக்கூற்றின் ஆழத்தை நன்குணர்ந்த நாலடியார்,

'வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்' [5]

என்னும் அடிகளில், மன்னிய மூன்றில் நடுவணது பொருள் எனப் பொருளுக்குப் பொருள் கூறிச் சிறப்பிக்கின்றது.

## 2. 2 இம்மையும் மறுமையும் இன்மை

பொருளானது அறம் இன்பம் என்னும் இரண்டும் சிறக்க துணைக் காரணமாக அமைவதோடு அப்பொருட் செல்வத்தை மேலும் பெருக்குதற்கும், கல்வி முதலிய வேறு பிற செல்வங்களைப் பெறுவதற்கும் காரணமாகவும் அமைகின்றது. இதனை,

'அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்' [6]

என உறையூர் முதுகண்ணன் சாத்தனார் அவர்கள் தெளிவுபடுத்தக் காணலாம். அறம்பொருள் இன்பம் என்னும் மூன்றிற்குமே பொருள் துணையாவது கருதியே வள்ளுவர்.

'அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு' [7]

என உவமை முகத்தானே கூறிச்,

'செய்க பொருளை' [8]

எனக் கட்டளையிடுவதையும் காண்கிறோம். அன்றியும், மறுமைக்கும் பொருளே துணைக் காரணம் என்பதை,

'இன்மை — எனவொரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்' [9]

என்னும் குறளால் குறிப்பிடுகின்றார். இதனையே தெளிவாக்கிக் கம்பர்,

'மறுமை கண்டமெய்ஞ் ஞானியர்
ஞாலத்து வரினும்
வெறுமை கண்டபின் யாவரும்
யாரென விரும்பார்' [10]

எனக் கூறுகிறார். இவ்வாறு அனைத்திற்குமே பொருள் துணைக்காரணமாய் இருப்பது நோக்கி, அதனை நடுவணதாக வைத்த நயம் தமிழர்தம் நுண்மாண் நுழைபுலத்தையே சுட்டுகிறது எனலாம்.

## 3. 1 அறத்தின் முதன்மை

வாழ்வின் அடிப்படை எனப் பழந்தமிழரால் வகுத்துக் கொள்ளப்பட்ட மூன்றிலும் அறமே பெரும்பான்மையான இடங்களில் முதலாவதாகச் சுட்டப்படுகிறது பழைய மரபாகவும் விளங்குகிறது. இதனை,

'ஆற்றல்சால் கேள்வி யறம்பொரு ளின்பம்' [11]
'அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்' [12]
'சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம்' [13]
'அறம் பொரு ளின்பமென் றம்மூன்று' [14]

எனவரும் சங்க இலக்கிய அடிக்கும்,

"அறம்பொருள் இன்பம் உயிரச்சம்" [15]

எனவரும் குறளின் அடியும், அறம்பொருள் காமம் என்னும் குறளின் பாலமைப்பும் உணர்த்தக் காணலாம்.

அறம் முதலில் வைக்கப்படுவதற்கான காரணங்களைச் சீர்தூக்கிய பழைய உரையாசிரியர் பரிப்பெருமாள்,

"அறமானது — அறமுதலான பொருள்
நான்கினையும் பயத்தலின் முற்படக் கூறினர்" [16]

என்றும் பரிமேலழகர்,

"ஏனை பொருளும் இன்பமும் போலாது, அறன்
இம்மை மறுமை வீடென்னும் மூன்றையும்
பயத்தலான் அவற்றின் வலியுடைத்து" [17]

என்றும்.

திரு. வி. க. அவர்கள்,

> "அறம் பொருள் — இன்பம் என்று கூறுவது
> பழந்தமிழ் மரபு" 18

என்று விளக்கியுள்ளனர்.

"முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல்" 18 — அ வள்ளுவரின் குறளிடையே மறைந்து கிடப்பனவற்றுள் ஒன்று வீடு பற்றிய கருத்தே. உரையாசிரியர்கள் காலம் வீடுபேறு பற்றிய கருத்துக்கள் நன்ருக மலர்ந்து மணம் வீசிக்கொண் டிருந்த காலம் அவர்கள் தத்தம் கால எண்ணக் கலவை யோடே குறளுக்கு உரை தர முயன்றிருப்பினும் மறைந்து கிடக்கும் ஒன்றையே வெளிப்படக் கிடந்ததாகக் காட்ட முயன் றுள்ளனர், ஆகவே, உரையாசிரியர்களின் முன்னிரண்டு விளக்கங்களுங்கூட அறத்தின் முதன்மைக்குப் பெரும்பான் மையும் அரண் செய்வனவாகவே அமைந்துள்ளன எனலாம். அறத்திற்கு முதன்மை தரும் போக்கைப் புற நானூற்றிலேயே காண்கிருேம். இதனை,

> "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
> அறத்து வழிபடூஉம்" 19

என்னும் அடிகளால் அறியலாம். மேலும் அறம் பொருள் இன் பம் என்னும் கோட்பாடு அருளியலுக்கு வழிகாட்டத் தக்கதென நூல்களால் நாட்டப்பட்ட நெறிமுறை எனக்கொண்டால், இம் முறை வைப்பே பாடறிந்து ஒழுகும் பண்டைத் தமிழரின் பண் பட்ட நெறிமுறையைச் சுட்டுகிறது எனலாம்.

## 3. 2 இன்பமும் முதன்மையிடமும்

அறம் பொருள் இன்பம் என்னும் வைப்பு முறைக்கு மாருக, இன்பத்தை முதலாகக் கொண்டு,

> "இன்பமும் பொருளும் அறனும் என்ருங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை." 20

என்னும் தொல்காப்பியக் களவியல் நூற்பாவின் தொடக்க அடிகள் வந்துள்ளமை கருதத் தக்கது. இதற்கு விளக்கங் கூறவந்த உரையாசிரியர்களுள் இளம்பூரணர்,

> 'அவரெய்தும் இன்பமும் அவ்வின்பத்திற்குக்
> காரணமாகிய பொருளும், அப்பொருட்குக்
> காரணமாகிய அறனும் எனக் காரணகாரியம்
> நோக்கி வைத்தார்" 21

எனவும், நச்சினர்க்கினியர்,

"அறத்தினன் பொருளாக்கி, அப்பொருளான்
இன்பம் நுகர்தற் சிறப்பானும், அதனன் இல்லறங்
கூறலானும் இன்பம் முற்கூறினர்" 22

எனவும் கூறியுள்ளனர். இக்கூற்றுகள் அறத்தின் சிறப்பைத் தெளிவாக்கவே முனைகின்றன. மேலும் ஐந்திணை ஒழுக்கம் அற நெறியின் பாற்பட்டே ஒழுக வேண்டியுள்ளதால், முன் இரண்டும் அறஞ்சார்ந்தே வருதல் வேண்டும் என்பதுமாயிற்று. பின்னர் ஏன் இன்பத்தை முன்னர்க் கூறினரோ எனின், களவிய லில் இன்பத்தின் நுகர்வைக் கூற விழைந்தமையே எனலாம். இவ்வாறு அகத்தின் இலக்கணங் கூறும் நூல்களும், தொடக்க நிலையில் இன்பத்தையே சிறப்பாகக் காட்டி எழுதப்படும் இன்ப நூல்களும். 'இன்பம்' என்பதையே முதலாகச் சுட்டும் என்பதை,

"அறத்தைச் சிறப்பாக நோக்காது இன்பத்தையே
நோக்கும் இன்ப நூல்களும் இலக்கண நூல்களும்
இம்முப் பொருளையும் இம்முறையிலேயே
(இன்பம் பொருள்
அறம்) குறிக்கும்" 23

என்னும் தமிழறிஞர் ஞா. தேவநேயன் அவர்கள் கூற்றால் அறியலாம். அதனல் தான் களவியலில் இன்பத்தை முதற்கண் கூறிய தொல்காப்பியர், செய்யுளியலில்,

"அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப" 24

என்னும் நூற்பாவில் அறத்தையே முதலாவதாகக் கொள் கின்ருர்,

## 4. 1 முடிவும் முரண்பாடும்

இதுகாறும் கண்டவற்ருல் அறம் பொருள் இன்பம் என்பதே தொல்காப்பியர் காலத்தும் நெறிமுறை என்பதும், இதுவே சங்க இலக்கியங்களிலும் மரபாகப் பின்பற்றப்பட்டுள்ளது என்பதும் புலனும். இம்மரபை அடியொற்றியே திருவள்ளுவரும் அறம் பொருள் இன்பம் என்னும் வைப்பு முறையைக் கையாண்டு முப்பாலை இயற்றியுள்ளார் என்பதும் தெளிவு. உண்மை இவ் வாறிருக்க,

"இவர் (வள்ளுவர்) பொருள் பாகுபாட்டினை அறம்
பொருள் இன்பமென வடநூல் வழக்குப் பற்றி
ஓதுதலான் அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண்
அடக்கினரென்க" 25

எனப் பரிமேலழகரும், அதற்கும் ஒருபடி மேலாகச் சென்று,

"தர்மார்த்த காமம் என்பனவற்றை 'த்ரிவர்க்கம்' என்பர் ஸ்மிருதிக் கர்த்தர்கள். இவற்றையே 'அறம் பொருள் இன்பம்' என்றும் 'முப்பால்' என்றும் மொழிபெயர்த்துத் தமிழ்ப்பெருநூலை வள்ளுவர் இயற்றியுள்ளார்" 26

எனப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறுவதும் அடாது.

## குறிப்புகள்

1 தொல்காப்பியம் பாயிரம்,
2. குறள் 751
3 குறள் 754
4 குறள் 760
5 நாலடியார் 114
6. புறநானூறு 28
7. குறள் 247
8. குறள் 759
9 குறள் 1042
10. கம்பராமாயணம், வருணனைப் படலம் 14
11. குறிஞ்சிப்பாட்டு — இறுதி வெண்பா
12. புறநானூறு 28
13. புறநானூறு 31
14. கலித்தொகை 141
15. குறள் 501
16. பரிப்பெருமாள், மேற்கோள்: புலவர் மு. சண்முகம் பிள்ளை திருக்குறள் அமைப்பும் முறையும் — பக்கம் 8.
17 திருக்குறள் பரிமேலழகர் உரை — அறன்வலியுறுத்தல் தொடக்க விளக்கம்.
18. திரு வி. க அணிந்துரை — திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பேரா. டாக்டர் மு. வ., பக். 16.
18 - அ. குறள் 1274.
19. புறநானூறு 31.
20 தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல்.
21 இளம்பூரணர். ,, ,,
22 நச்சினார்க்கினியர் ,, ,,
23. ஞா. தேவநேயன், திருக்குறள் தமிழ் மரபுரை, பக். 1.
24. தொல் பொருள் — 411
25 பரிமேலழகர், காமத்துப்பால் முன்னுரை.
26 பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கிய விளக்கம் பக்கம். 97.

# பாரதிதாசனாரின் குழந்தைப் பாடல்கள்

இ. சுந்தரமூர்த்தி,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

**திருடாதே :**

'மனத்துக்கண் மாசிலனாதல் அறம்' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கினைக் குழந்தை உள்ளத்தில் பதியவைக்க விரும்பும் உளத்தினர் பாவேந்தர். 'திருடினால் உன்நெஞ்சு உன்னைக் கொல்லும்' என்னும்போது நெஞ்சு சுடுவதைச் சுட்டுகின்றமையால் இது பெறப்படும்.

குருடன் இடத்திலும் திருடாதே ஒன்று
கொல்லுமே உன்னை உன்நெஞ்சே நின்று [12]
(குருடன்)

பசித்த போதிலும் பொறுப்பது பாங்கு
பருக்கை ஒன்றைத் திருடலும் தீங்கு
பிசைந்த கூழுக்கும் பிறர் உப்பு வேண்டாம்
பிழை செய்யும் நண்பனை யும்விட்டு நீங்கு.
(குருடன்)

இவ்வெளிய வரிகளில் வள்ளுவரின் அரிய கருத்துக்களான கள்ளாமையையும், வெஃகாமையையும், தீ நட்பையும் எவ்வளவு எளிதாகக் கூறிவிடுகின்றார் கவிஞர்.

நீ படி! நீ உழை! நீ பிழை நன்றாய்
நீ பிறர்க் குதவிசெய் நற்குணக் குன்றாய்
நீ படி செந்தமிழ் நூ லெலாம் ஒன்றாய்
நீ தமிழ்க் குள்ள பகைஎலாம் வென்றாய்

என்னும் பாடலால் செந்தமிழ் நூல் நன்கு கற்றும், உழைத்தும், உதவி செய்தும், குணக்குன்றாய்த் திகழ்ந்தும் தமிழ்ப் பகைவரை வெல்ல வேண்டும் என்னும் தம் உள்ளக் கிடக்கையைக் குழந்தையின் வாயிலாகப் புலப்படுத்தும் விதம் உன்னுதற்குரியது.

**உழைப்பின் உயர்வு :**

'உழைப்பே உயர்வினை நல்கும்' என்னும் கருத்தைக் குழந்தைக்கு உணர்த்த எழுந்த அழகிய பாடலே 'உடற்பயிற்சியும் கறிகாய் விளைவும்' என்னும் பாடலாகும். [13]

வாடகைக்கோர் சின்ன நிலம் வாங்கிக் கொண்டானே
குப்பன் — வாங்கிக் கொண்டானே
மண்வெட்டியை விடியுமுன்பு தாங்கிக் கொண்டானே
மேடிடித்தும் பள்ளந்தூ ர்த்தும் மிக உழைத்தானே
குப்பன் — மிக உழைத்தானே
வேளையுடன் அலுவலுக்கும் விரும்பிச் செல்வானே

என்று தொடர்ந்து வரும் இப்பாடலின் அடிகளில் எளிய இனிய ஓசைநயமும் கருத்தாழமும் துலங்குவதைக் காணலாம் குழந்தைகள், ஓசையையும் பொருளையும் உணர்ந்து மகிழும் என்பது திண்ணம்.

தூய்மை

குழந்தைப் பருவத்திலேயே தூய்மையைக் கற்றுக்கொடுக்க விழைகின்ற கவிஞர், வள்ளுவர் கண்ட அகத் தூய்மையையும், புறத் தூய்மையையும் உங்கள் தெரு கெட்ட தெரு ' என்னும் பாடலின் வழி உணர்த்துகின்றார் எனலாம். 14 சுற்றுப்புறத் தூய்மை எவ்வாறு கெடுகின்றது என்பதனை முதலிரு பாடல்களில் சுட்டுகின்றார் :

உங்கள்தெரு வீட்டின் முன்னே
மாடு கட்டி யிருக்கும் — அங்
குள்ளசாணி சிறுநீரில்
கொசுக்கள் நோயைப் பெருக்கும்
அங்கங் கேயும் வீட்டெதிரில்
குப்பை கூளம் கிடக்கும் — எனில்
அதனை நாயும் கோழி யும்போய்க்
கிளரிக் காற்றைக் கெடுக்கும்.

இது புறத்தூ ய்மையற்ற நிலைமையைச் சித்திரிப்பதாகும்.

பெரியவர்களும் தூய்மையின்மைக்குக் காரணமாவதை உண்மையுணர்வோடும், நகைச்சுவையோடும் அவர் கூறுவது உளங் கொளத்தக்கதாகும்.

தங்குழந்தை தெருவில் பகலில்
வெளிக்குப் போகக் கண்டு — நல்ல
தந்தையரும் இருட்டினிலே
செய்வர் அந்தத் தொண்டு.

' நல்ல தந்தையர் ' அந்தத் ' தொண்டு ' செய்வதைக் கவிஞர் எத்துணை நுட்பமாகவும் நாகரிகமாகவும் உரைக்கின்றார் ?

அகத்தூய்மையின் இன்றியமையாமையை உணர்ந்து 'காது பொறுக்காத வண்டை மொழி பேசுவாரை இகழ்வார். குழந்தைகள் அவற்றைக் கேளாதிருப்பது நல்லதன்றோ? மேலும் அகத் தூய்மைக்குப் படிப்பகம் இன்றியமையாதது என்பார்.

"அகமாரப் பிறர்க்கின்னல்
செய்வதில்லை என்னும் — ஓர்
அன்பிருந்தால் உம்தெருவில்
அழகு, தூய்மை மன்னும்

என்னும்போது அருளுணர்வும், அன்புணர்வும் இளம் வயதிலேயே படிய வேண்டியதின் உண்மையை நன்கு உணர்த்துகின்றார் கவிஞர். இறுதியில் அகத்தூய்மை திகழச் சட்டங்கள் மட்டும் போதா. நல்ல மனச்சான்றும் தேவை' என்று முடிக்கின்றார்.

எலித்தொல்லையில் இனப்பற்று :

கவிஞரின் பாடல்களில் 'வடநாட்டினரின் ஆதிக்கத்தைப்' பற்றிய எதிர்ப்புக் கூறுகள் நிறைந்துள்ளன என்பது வெளிப்படை. குழந்தைப் பாடலிலும் எத்துணை அளவு அதை நுட்பமாக உவமை வாயிலாக உரைத்துள்ளார் என்பதை 'எலிகள்' என்னும் தலைப்பில் அவர் பாடிய குழந்தைப் பாடல் இனிது உணர்த்தும்

பாடலின் முதற் பகுதியில் எலிகளின் இயல்பை மிக எளிமையாகக் கூறுகின்றார் கவிஞர். அவர் வீட்டு எலிகள் திருடுவதில் புலிகளாம். 'இரவு பகல் பண்டங்களைத் திருடுவதில் புலிகளான அவ் எலிகள் ;

கண்ணெதிரில் ஓடி ஒன்று
கதவிடுக்கில் மறையும் — அங்குக்
காய்ச்சிவைத்த நெய்யினிலே
பாதிக்குமேல் குறையும்
எண்ணெயினைக் குடிக்கும் ஒன்று
புளியை ஒன்று தின்னும் — அங்கு
இரண்டெலிகள் பழச்சீப்பை
இழுக்கும் முன்னும் பின்னும்

என்னும்போது குழந்தைகளுக்கேற்ற ஓசைநயமும், ஒலியும் நன்கு திகழ்கின்றன இவற்றில் சிறப்பாகப் பழந்தமிழ் ஏடுகளைச் சிதைத்த எலியின் தொண்டையும் சுவையோடு கூறுகின்றார்.

பழஞ்சுவடி ஏட்டை எல்லாம்
பழுதுபார்க்கும் ஒன்று — புதுப்
பாடலையும் திருத்திவைக்கும்
ஏடுகளைத் தின்று

என்று கூறும்போது அவர் ஆற்றாமையால் புலம்பும் புலம்பலும் அழகாகத்தான் ஒலிக்கிறது; எலிகள் இங்கு எப்படி வந்தன என்பதைத் தமக்கே உரிய உணர்வோடு கூறுகின்ற கவிஞரின் நைந்த உள்ளம் நன்கு புலப்படும்.

'தழைந்த நாட்டில் நுழைந்தவட
நாட்டினரைப் போலே — நமைத்
தாக்குமிந்த எலிகள் தொல்லை
நீக்க வேண்டும் மேலே.

குழந்தைப் பாட்டிலும் இன உணர்வு அவர்க்கு மேலோங்கி நிற்பதில் வியப்பில்லை அன்றோ? அவ்வுணர்வையும் நமக்கு இளவயதிலேயே ஊட்ட விழைகின்றார் போலும் கவிஞர்.

### தமிழ்ப் பற்று

'எலிப்பாட்டில்' இன உணர்வை ஊட்டியது போலவே குதிரைப் பாட்டிலும் குன்றாத தமிழ்ப்பற்றைக் குழந்தைக்கு உணர்த்துவதை குடும்ப விளக்கு நன்கு காட்டும். வேடப்பன் விளையாடும் குழந்தையை முதுகில் ஏற்றித் தான் குதிரையாக மாறித் தன் குழந்தையை அரசியாக மாற்றுகின்றான். குழந்தை விளையாட்டில் 'புரட்சிக் கவிஞர்' குழந்தைக் கவிஞர் பாடும் பாடல்:

அப்பாக் குதிரை ஆட்டக் குதிரை
அஞ்சாக் குதிரை ஏய் ஏய்ஏய்
தப்பாக் குதிரை தாவும் குதிரை
தளராக் குதிரை ஏய் ஏய் ஏய்

சப்பைக் குதிரை இல்லை இல்லை
தமிழக் குதிரை ஏய் ஏய் ஏய்
ஓப்பும் குதிரை ஓயாக்குதிரை
ஒற்றைக் குதிரை ஏய் ஏய் ஏய்
பேசும் குதிரை பெருத்த குதிரை
பிழையாக் குதிரை ஏய் ஏய் ஏய்
தோசைக் குதிரை சோற்றுக் குதிரை
சோராக் குதிரை ஏய் ஏய் ஏய்
மீசைக் குதிரை வெற்றிக் குதிரை
வேட்டைக் குதிரை ஏய் ஏய் ஏய்
தேசுக் குதிரை தெற்குக் குதிரை
சேரன் குதிரை ஏய் ஏய் ஏய். 7

"சப்பைக் குதிரை இல்லையாம்; தமிழ்க்குதிரை — சேரன் குதிரை" என்று கூறும்போது அவருடைய உள்ளம் அடைந்த உவகையைப் பாடலே உணர்த்துகிறது கனல் வீசும் சொற்களைப் பெய்யும் கவிஞருடைய நடையில்தான் எத்துணை மாற்றம்...... எளிமை! இனிமை; புரட்சி வீசும் பொறிகளைச் சொற்களாக்கித் தரும் பாவேந்தரின் பாடல்களில் குழந்தைமையும் தண்ணொளியாகக் காட்சியளிக்கின்றதன்றோ?

'வடசொல்லைக் கலந்து எழுத வேண்டா' என்பதனைச் சிறுவர்கட்கு உணத்தும் விதம் உணர்ந்து மகிழ்தற்குரியது:

'காட்சி' என் றெழுது தம்பி — சிலர்
காக்ஷிஎன் பார்அது தப்பாம்
காட்சிஎன் னும்பெயர் தம்பி — கேள்
காண்எனும் சொல்லின்வி ளைவாம். 8

இங்கு சொற்பிறப்பினைச் சொல்லித் தருகின்றார் கவிஞர். 'மாட்சி' என்பதும் 'மாண்' என்னும் சொல்லின் விளைவு என்பர்.

அடிக்கடி 'உத்யோகம்' என்பர் — அதை
அலுவல்என் றுரைத்திடு தம்பி
படிப்பது வாசித்தல் இரண்டில் — உன்
பழந்தமிழ் முன்னது தம்பி
உடுத்திடும் வேட்டியை வேஷ்டி — என
உரைப்பதும் பெரும்பிழை அன்றோ ?
தடுப்பினும் சாதமென் பார்கள் — அதைத்
தமிழினில் சோறென்று நீ சொல்.

என்னும் பகுதிகளில் 'கவிஞரின் கனல் வீசும் கொள்கை' குழந்தையிடம் மென்மையாக ஒலிப்பதைக் காணலாம். வளரும் குழந்தையிடம் வளர்ந்த பெரியவரும் குழந்தையாகப் பேசுவது தானே உளவியல் !

முடிவுரை :

குழந்தைப் பாடல்களில் பாரதிதாசனரின் மென்மை உணர்வு நன்கு புலனாகின்றது. கொள்கைப் பிடிப்பு உடைய கவிஞரின் பாக்களில் அமைந்திருக்கும் கூரிய செஞ்சொற்கள் படிப்பார் நெஞ்சைப் பற்றி இழுக்கும் பான்மையன. ஆனால் குழந்தைப் பாடல்களில் அவ்வுணர்வுகள் மென்மையாக ஒலிக்கின்றன. கவிஞர் அக்கொள்கைகளையும் மெல்லிய பூக்களாக்கி, அனிச்சமலரால் தொடுத்துக் குழந்தைகட்குச் சூட்டி மகிழ்ந்திருக்கின்றார் எனலாம். அவருடைய சொற்கடுமை குழந்தைப் பாடல்களில் கனிவாகித் தேனும் பாலுமெனத் தித்திப்பதற்குக் காரணம் பாரதிதாசனர் 'உளவியல் நோக்கோடு அவற்றை வெளிப்படுத்தியதனாலேயாம்

காதற்பாட்டில் காதலாகிக் கசிந்துருகும் கவிஞர், புரட்சிப் பாட்டில் எவருக்கும் அஞ்சா வீரராய்த் தோன்றும் கவிஞர், குழந்தைப் பாட்டில் குழந்தையாய் மாறிவிடுகின்ற தன்மையைக் கண்டு மகிழலாம் இங்குக் கற்பனையைக் காட்டிலும் அவரே குழந்தையாய் மாறிய தன்மை புலனாகின்றது. கவிஞரின் குழந்தைப் பாடல்கள் தமிழுக்கும் தமிழருக்கும் வாய்த்த அரும் பெருஞ் செல்வங்களாகும்,

## குறிப்புகள்

1, மு. வரதராசன், டாக்டர் மு தமிழ் இலக்கிய வரலாறு சாகித்திய அக்காதெமி, புதுடெல்லி, 1972. பக். 331.

2 ,, ,, ,, பக். 331. 332.

3 பாரதிதாசன், பன்மணித்திரள், முத்தமிழ்ச்செல்வி அச்சகம், சென்னை, 1964, பக். 313.

4, பாரதிதாசன், குடும்ப விளக்கு, ( 3, 4, 5 பகுதிகள் ), நான்காம் பகுதி, பாரதிதாசன் பதிப்பகம், சென்னை — 1973, பக், 69.

5. பாரதிதாசன், குடும்ப விளக்கு. நான்காம் பகுதி பக். 90,

6. தூரன், பெ, குமரப்பருவம், பக் 3 பாரி நிலையம் சென்னை, 1962.

7. பன்மணித்திரள், பக். 333.

8. பன்மணித்திரள், பக். 333

9. பன்மணித்திரள். பக் 323, 324.

10, ,, பக், 321 322.

11. ,, பக். 320.

12, ,, பக் 325.

13. ,, பக். 326.

14. ,, பக். 330.